அ.வ.எண் : 76/2016 நாள்: 21.10.2024

வா.சா.1. திருமதி. பாகம்பிரியாள்

<u>4 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

1. நான் எங்கு வசிக்கிறேன் என்றால் சூரியன் குடியிருப்பில் வசித்து வருகிறேன். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். கோவிலில் பூசாரித்தனம் சுப்பையா என்பவர் பண்ண வேண்டும் என்பதற்காக எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 4 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் எனது கிராமத்தச் சேர்ந்த பல்வேறு சமூகத்தை சேர்ந்த நபர்கள் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன்.

2. எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 228/2 ல் 6 ஏக்கர். மேற்படி 6 ஏக்கரில் 4 செண்ட்டில் கோவில் உள்ளது. இதர இடங்களில் விவசாய நிலம் உள்ளது. மேற்படி கோவிலில் 2013 ம் வருடம் கும்பாபிஷேகம் நடைபெற்றது ஆனால் மாதம், தேதி தெரியாது. தாவா கோவில் 300 ஆண்டுகள் பழமையான கோவில் என்றால் சரிதான். தாவா சொத்தில் 4 செண்ட் கோவில் உள்ள இடம் போக மற்ற இடங்களில் அனுபவம் எனது தந்தை செய்ததற்கான அடங்கல் மற்றும் இதர வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி 6 ஏக்கரில் உள்ள விவசாய நிலங்களில் வரும் நெல்மணிகளை எனது தந்தை தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஒரு ஆண்டுக்கு ஒரு ஏக்கரில் 40 மூட்டை வீதம் 240 மூடைகள் நெல்மணிகளை எனது தந்தை அறுவடை செய்து எனது தந்தை பலன்பெற்று வருகிறார் என்று

சொன்னால் கோயில் மாடுகள் எல்லாம் மேற்படி 6 ஏக்கரில் உள்ள நெல்மணிகளை மேய்ந்து விடும்.

3. தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது தகப்பனார் தாவா கோவிலில் 2014 லிருந்து 2024 வரை பூசைகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2014 லிருந்து 2024 வரையிலான காலத்தில் தாவா சொத்தில் இருந்து கிடைக்கும் நெல்மணிகள் மூலம் வரும் வருமானங்களை கோவிலுக்கு எனது தகப்பனார் பயன்படுத்தவில்லை என்றால் விவசாயம் விளையவே இல்லை அதனால் கோவில் பயன்பாட்டுக்கு எதையும் கொடுக்கவில்லை.

4. நிரூபண வாக்குமூலத்தில் சொன்னது போல் எவ்வளவு நெல்மூட்டைகளை கோவிலுக்கு குறிப்பிட்டு கொடுத்தார் என்ற கணக்கு விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா கோவிலுக்கு தலைவர், பொருளாளர், செயலாளர் என யாரும் இல்லை. 2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருவிழாவில் 3 கிராமத்தைச் சேர்ந்த கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள் என்றால் நான் கலந்து கொள்ளவில்லை மற்றவர்கள் கலந்து கொண்டார்கள். மேற்படி திருவிழாவில் 2024 ம் ஆண்டு யார் பூசாரியாக இருந்தார் என்று எனக்கு தெரியாது.

5. 2019 ம் ஆண்டில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாவா கோவிலில் திருவிழா நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். தாவா கோவிலில் திருவிழா யார் தலைமையில் யார் வரி வாங்கி நடத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2019, 2024 ம் வருடங்களில் நடந்த திருவிழாக்களில் வாதிகள் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான்.

**(4 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

//ஒப்பம்//

மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.